1970 செப்டம்பர் 3]

Ceiling on rice stock with dealers

* 222 Q.—Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Food and Commercial Taxes be pleased to state:

(a) whether the Government has prescribed a ceiling for rice stocks held by Foodgrains dealers in this State; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) உணவு தானிய வியாபாரிகள் அரிசி இருப்பு வைத்திருப்பதற்கான உச்சவரம்பு ஒன்றும் இந்த அரசு விதிக்கவில்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, நெல் அரிசி வியாபாரத்தில் பலர் ஆயிரக்கணக்கான மூட்டைகளைப் பதுக்குவதன் மூலம் நாட்டிலே ஏற்படும் உணவுப் பஞ்சத்தைத் தடுக்க இனியாவது அரசாங்கம் உச்சவரம்பை வைக்க உத்தேசிக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, 40 குவிண்டால் நெல்லோ அல்லது 25 குவிண்டால் அரிசியோ அதற்குமேல் இருந்தால் அதற்குண்டான கணக்குகளை அரசாங்கத்திற்குக் கொடுக்க வேண்டுமென்று வைத்திருக்கிறது. எவ்வளவு வைத்திருக்கலாம் என்பதற்கு உச்சவரம்பு இல்லை. கணக்கிருந்தால் போதும் என்று வைத்திருக்கிறோம்.

கொடவாசல் திரு. சி. கிருஷ்ணமூர்த்தி: தலைவரவர்களே, இந்த நெல்-அரிசி வியாபாரிகள் அவர்கள் கொள்முதல் செய்யும் நெல்லையோ, அரிசியையோ 15 தினங்களுக்கு மேல் இருந்தால் அரசாங்கத்திற்கு பாக்கியிருக்கும் நெல்லை விட்டுவிட வேண்டுமென்று ஏற்கெனவே அரசாங்கம் அறிவித்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தனிக்கேள்வி போடவும்.

அரியலூர் பகுதியில் கிடைக்கும் ஜிப்சம் படிவங்கள்

*223. வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டம், அரியலூர் பகுதியில் கிடைக்கும் ஜிப்சம் கல்லைக்கொண்டு தொழிற்சாலை ஏதேனும் ஏற்படுத்த அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இல்லை.

காஞ்சீபுரத்தில் சரிகைத் தொழிற்சாலை

*224. வினா—திரு. வை. சுவாமிநாதன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சீபுரத்தில் சரிகைத் தொழிற்சாலை அமைக்க மத்திய அரசு மாநில அரசிற்கு அனுமதி அளித்துள்ளதா?

(இ) இதற்காக ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) இத்திட்டத்தை செயல்படுத்த சுமார் 25 லட்சம் ரூபாய் தேவைப்படுகிறது.

திரு. வை. சுவாமிநாதன் : தலைவரவர்களே, இது தனியார் துறையில் ஒப்படைக்கப்படவிருக்கிறதா அல்லது அரசாங்கமே செய்யப்போகிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அரசாங்கமும் தனியாரும் சேர்ந்த கூட்டுத்துறை.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவரவர்களே, காஞ்சிபுரத்தில் பட்டு சரிகைத் தொழிற்சாலையை அமைப்பதுபற்றி அரசாங்கத்தினால் முன்பு முடிவு செய்யப்பட்டது. ஆனால் இது பேப்பரிலேயே இருக்கிறதே தவிர அதைச் செயற்படுத்த அரசாங்கம் எடுத்துக் கொண்ட முயற்சி என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அறிஞர் அண்ணா அவர்கள் நம்முடன் இருந்த காலத்திலே இந்தத் தொழிற்சாலை வேண்டுமென்று முடிவு எடுக்கப்பட்டது. ஆனால் தங்கக்கட்டுப்பாடு இருந்த காரணத்தினால் இதற்கு அனுமதி பெறுவதற்குக் காலதாமதம் ஏற்பட்டது. அண்மையில் மத்திய சர்க்கார் அனுமதி அளித்திருக்கிறது. இதற்காக தனி அதிகாரி ஒருவரை, டி. ஆர். ஓ. அளவிலே போட்டு உடனடியாக காஞ்சிபுரத்தில் தொழிற்சாலையைத் துவங்க ஏற்பாடு செய்யப்படுகிறது.

Price of raw silk

* 225 Q.—THIRU K. SAHADEVA KANDER : Will the Hon. the Minister for Industries be pleased to state whether the Government are aware of the steep rice in price of raw silk in this State?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஆம். ஏற்றுமதி செய்யத்தக்க பட்டுத் துணி ரகங்களை தயாரிப்பதற்கு "சர்க்கா" பட்டு பயன்படுத்தப் பட்டு வருவதால், மைசூர் மாநில பட்டு உற்பத்தியாளர்கள் மேற்படி பட்டு உற்பத்தியின் அளவைக் குறைத்துவிட்டதே இதற்கு முக்கியக் காரணமாகும். மத்தியப் பட்டு வாரியம் மூலமாக நியாயமான விலையில் கச்சா பட்டு வழங்கப் பெறவும், ஜப்பான் நாட்டிலிருந்து கச்சா பட்டு இறக்குமதி செய்யப் பெறவும் வேண்டி மாநில அரசு இந்திய அரசுடன் முன்னரே கடிதத் தொடர்பு கொண்டுள்ளது.

திரு க. சகாதேவ கண்டர் : மதிப்பிற்குரிய பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாட்டிலே நாகரீகம் நாளுக்குநாள் வளர்ந்து கொண்டே போகிறது. இப்படிப்பட்ட நிலையிலே கச்சாப்பட்டின் விலை உயர்ந்துகொண்டிருக்கிறது. எனவே, விலை உயராமல் தடுக்க அரசாங்கம் முன்னெச்சரிக்கையாக நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கச்சாப்பட்டிற்கும் நாகரீகத்திற்கும் தொடர்பு இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. நாம் நம்முடைய பகுதியிலே இந்தப் பட்டைக்கொண்டு ஏராளமான